7

**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 3.50.0 HA FOR THE UNIT OF M/S. TVL. SRINIVASA & CO., S.F.NO. 886 & 887 (P) (GOVT POROMBOKE LAND) OF ACHETTIPALLI VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT:**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. S. Shanthi., | : | Special District Revenue Officer (LA), National Highways-948A, STRR, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Dr. M Senthilkumar., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Thiru. V Rangasamy | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. V. Vinod Ragavendra | : | Partner,<br>M/s. Tvl. Srinivasa & Co., |
| 5 | Mr. S. Suryakumar<br>(EIA Consultant) | : | Managing Director<br>M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd, Salem |
| | Public | : | 45 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri welcomed the Special District Revenue Officer (LA), National Highways-948A, STRR, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all general public and project proponent who have attended the public hearing for the proposed Rough Stone Quarry lease over an extent of 3.50.0 Ha for the unit of **Tvl. Srinivasa & Co.,S.F.No. 886 & 887 (P) (Govt Poromboke Land) of Achettipalli Village, Hosur Taluk, Krishnagiri District** is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and

Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinamani" and "Indian Express" dated 14.01.2021 and informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Special District Revenue Officer (LA), National Highways-948A, STRR, Hosur has initiated the Public Hearing process. Further, the Special District Revenue Officer (LA), National Highways-948A, STRR, Hosur requested the project proponent to explain about their proposed project through power point presentation about the proposed rough stone quarry project and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. S. Suryakumar, EIA Consultant of the proposed Rough Stone Quarry project over an extent of 3.50.0 Ha for the unit of **Tvl. Srinivasa & Co.,S.F.No. 886 & 887 (P) (Govt Poromboke Land) of Achettipalli Village, Hosur Taluk, Krishnagiri District** has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Subramani, Edapalli village:**

   He stated that there is no impact for them due to the proposed stone quarry project.

9

Thereafter, the public were again invited to express their views and any comments about the proposed rough stone quarry project. Since, no one came forward to give opinion/view and no further response from the public, the District Environmental Engineer , Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

Further, 3 nos. of written suggestions/opinion/complaints received on the proposed rough stone quarry project during the public hearing meeting is enclosed as Annexure.

Further, it is informed that there is no written representation /E-mail received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Polution Control Board, Hosur, Krishnagiri District from the public about the views/comments/complaints on the proposed rough stone quarry project.

List of publics attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

23/2/2024

**District Environmental Engineer,**
**TNPC Board**
**Hosur**

23/2/2024

**Special District Revenue Officer**
**(Land Acquisition),**
**National Highway - 948A, STRR**
**Hosur**

5/5

**District Collector**
**Krishnagiri**

5/5

திரு/ள். ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண். 886 & 887 (P) (புறம்போக்கு நிலம்) அச்செட்டிப்பள்ளி கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 17.02.2021 முற்பகல் 11.00 மணியளவில் திரு/ள். ஸ்ரீமகாலட்சுமி கல்யாண மண்டபம், குஷ்னி பாளையம், எடயநல்லூர் மெயின் ரோடு, மத்திகிரி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

திருவாளர்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. S. சாந்தி | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை–948A, STRR, ஓசூர், (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Dr.மு.செந்தில்குமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | திரு. வீ. ரங்கசாமி | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. வி.வினோத் ராகவேந்திரா | : | பங்குதாரர், திரு/ள். ஸ்ரீனிவாசா & கோ, |
| 5 | திரு. S. சூர்யகுமார் (சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீடு ஆலோசகர்) | : | நிர்வாக இயக்குநர் ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம். |
| | பொதுமக்கள் | : | 45 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு/ள் ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை–948A, STRR, ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும் இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே “தினமணி” மற்றும் “இந்தியன் எக்ஸ்பிரஸ்” நாளிதழ்களில் 14.01.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலையின் உரிமையாளரின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் மூலம் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை–948A, STRR, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள் ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் பங்குதாரரை உத்தேசிக்கப்பட்டுள்ள கல்சுரங்கம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

பின்பு தி/ள் ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. சூர்யகுமார், தி/ள். ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கல்குவாரி திட்டம் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் நிழற்படம் மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரையின் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1. திரு. சுப்பிரமணி, எடப்பள்ளி கிராமம்,**

தி/ள் ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி திட்டம் வருவதால் தங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என தெரிவித்தார்.

பின்பு, பொது மக்களை நோக்கி வேறு எவரேனும் கருத்துக்களை பதிவு செய்ய விருப்பமுள்ளீர்களா?. என வினவப்பட்டது. பொதுமக்கள் எந்தவித கருத்துக்களையும் கூற முன்வராததால் முடிவாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து பொதுமக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் நன்றி கூறி கருத்து கேட்பு கூட்டம் முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், தி/ள் ஸ்ரீனிவாசா & கோ – ரஃப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரஃப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடம் பெறப்பட்ட 3 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள் ஸ்ரீனிவாசா & கோ உத்தேசிக்கப்பட்டுள்ள ரஃப் ஸ்டோன் குவாரி அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ / மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அலுவலகத்தால் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, காணொலி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

23/2/2021
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
ஒசூர்.

23/2/2021
தனி மாவட்ட வருவாய் அலுவலர்
(நில எடுப்பு),
தேசிய நெடுஞ்சாலை–948A, STRR
ஒசூர்,

மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.